பட்டுக்கூடு விலை விவரம்

	சேலம்	ராசிபுரம்
வரத்து	: 72.200 கி.	113.450 கி.
அதிகபட்ச விலை	: ரூ.621	ரூ.562
குறைந்தபட்ச விலை	: ரூ.621	ரூ.369
சராசரி விலை	: ரூ.621	ரூ.502

முட்டை விலை நிலவரம்

முட்டை விலை : 530 பைசா (ஒன்று)

பிராய்லர் கறிக்கோழி : ரூ.102 (ஒரு கிலோ)

முட்டைக் கோழி : ரூ.102 (ஒரு கிலோ)

வெப்ப அலை, வறட்சியில் இருந்து தோட்டக்கலைப் பயிர்களை பாதுகாக்க

நிலப்போர்வை, நுண்ணீர் பாசன முறைகளை பின்பற்ற வலியுறுத்தல்

சேலம்

சேலம் மாவட்டத்தில் வறட்சி, வெப்பஅலை வீசும் என்பதால் விவசாயிகள் தோட்டக்கலைப் பயிர்களை மூடாக்கு, நிலப்போர்வை அமைத்து பாதுகாப்பதுடன், நீரை சிக்கனமாகப் பயன்படுத்தியும், நுண்ணீர் பாசன முறைகளை பின்பற்றவும் வேண்டும் என்று சேலம் மாவட்ட தோட்டக் கலைத்துறை துணை இயக்குநர் மஞ்சுளா தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு:

சேலம் மாவட்டத்தில் தோட்டக்கலைப் பயிர்களான காய்கறிகள் 34,149 ஹெக்டேரில், பழப்பயிர்கள் 14,076, மலைத்தோட்டப் பயிர்கள் 26,486, மலர்கள் 4,783, நறுமணம் மற்றும் சுவை தாளிப்பயிர்கள் (மிளகு உள்ளிட்ட மலைகளில் விளைபவை) 9,759 ஹெக்டேர் பரப்பளவில் ஆண்டுதோறும் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது.

நடப்பாண்டு மே மாதம் முதல் செப்டம்பர் வரை வெப்ப அலை வீசக் கூடும் எனவும், பருவமழை குறையக்கூடும் எனவும் இந்திய வானிலை ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது. எனவே, வானிலை பாதிப்புகளை எதிர் கொள்ளும் வகையில் விவசாயிகள் சில முக்கிய வழிமுறைகளை பின்பற்ற வேண்டும்.

நண்பகல் 12 மணி முதல் 3 மணி வரை வயல் வெளியில் பணிகள் மேற்கொள்வதை விவசாயிகள் தவிர்க்க வேண்டும். மேலும், நிலத்தடி நீர் மட்டம் குறையும் அபாயம் உள்ளதால், தற்போது தேவைக்கு அதிகமாக நீரை செலவிடாமல் முறையாக பயன்படுத்த வேண்டும். பாசன நீர் ஆவியாகி வீணாவதைத் தடுக்க பயிர்களுக்கு நுண்ணீர் பாசன முறை மூலம் அதிகாலை அல்லது மாலை நேரங்களில் நீர் பாய்ச்ச வேண்டும்.

பயிர்களில் இருந்து அதிகப்படியான நீர் ஆவியாகி வெளியேறுதலை தடுக்கும் வகையில், கயோலின் 3 % (அ) டை அம்மோனியம் பாஸ்பேட் 2 % மற்றும் பொட்டாசியம் குளோரைடு 1 % (அ) பி.பி.எப். எம் எனப்படும் உயிர் உரத்தை 2% 30 நாள் இடைவெளியில் காலை அல்லது மாலை நேரங்களில் தெளிக்க வேண்டும்.

காய்கறி சாகுபடி செய்யும் விவசாயிகள் பாசன நீர் ஆவியாதலை தடுக்க தென்னை நார் கழிவுகள் (அ) காய்ந்த இலை சருகுகளை கொண்டு மூடாக்கு அமைக்க வேண்டும். காய்ந்த, தேவையற்ற மரக்கிளைகளை கவாத்து செய்து அகற்றி, நிலப்போர்வை அமைத்து காற்றோட்டத்தை அதிகப்படுத்தி தோப்புக்குள் வெப்பம் அதிகமாவதை தவிர்க்க வேண்டும்.

தோட்டக்கலைப் பயிர்களை புதியதாக நடவு செய்யும் விவசாயிகள், குறைந்த நீர் தேவையுடன் வெப்பம் தாங்கி வளரக்கூடிய ரகங்களை தேர்வு செய்து நடவு செய்ய வேண்டும். மேலும், நிலப்போர்வை மற்றும், நுண்ணீர் பாசன முறைகளை பின்பற்ற வேண்டும். அவ்வப்போது பயிர்களில் ஏற்படும் மாற்றத்தை கண்காணித்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும், என்று தெரிவித்துள்ளார்.

ஈரோடு நந்தா பொறியியல் மற்றும் தொழில்நுட்ப கல்லூரிகளில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி துறைகளின் மூலம் பல்வேறு நிறுவனங்களில் வேலைவாய்ப்பு பெற்ற மாணவ, மாணவிகளுக்கு பணி நியமன உறுதி ஆணையை வழங்கிய எல் அண்ட் டி எம் நிறுவனத்தின் வளாகத் தலைவர் தியாகு தர்மலிங்கம். உடன், நந்தா கல்வி அறக்கட்டளையின் தலைவர் வி.சண்முகன்.

நந்தா பொறியியல் கல்லூரி மாணவர்கள் 1,735 பேர் பன்னாட்டு நிறுவனங்களில் பணி நியமனம்

ஈரோடு

ஈரோடு நந்தா பொறியியல் கல்லூரி மற்றும் தொழில்நுட்பக் கல்லூரிகளில் நடப்பு கல்வியாண்டில் பல்வேறு பன்னாட்டு, தேசிய அளவிலான நிறுவனங்கள் மூலமாக வேலை வாய்ப்பு பெற்ற 1,735 மாணவ,மாணவிகளுக்கு பணி நியமன ஆணை வழங்கும் விழா 'வேலைவாய்ப்பு தினம்' என்ற தலைப்பில் நடைபெற்றது.

நந்தா பொறியியல் கல்லூரியின் முதல்வர் யு.எஸ்.ரகுபதி வரவேற்றார். விழாவுக்கு, ஸ்ரீநந்தா கல்வி அறக்கட்டளை தலைவர் வி.சண்முகன் தலைமை வகித்தார். அறக்கட்டளை உறுப்பினர் பானுமதி சண்முகன் குத்துவிளக்கேற்றி நிகழ்வை தொடங்கி வைத்தார். ஸ்ரீநந்தா கல்வி அறக்கட்டளையின் இணை நிர்வாக அறங்காவலர்கள் எஸ்.நந்தகுமார் பிரதீப், எஸ்.திருமூர்த்தி, நிர்வாக அதிகாரி ஏ.கே.வேலுசாமி ஆகியோர் முன்னிலை வகித்து பேசினர்.

சிறப்பு அழைப்பாளராக எல் அண்ட் டி எம் நிறுவன வளாகத் தலைவர் தியாகு தர்மலிங்கம் பங்கேற்று, நந்தா கல்வி நிறுவனங்களின் வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித் துறைகளின் மூலம் நடப்பு கல்வியாண்டில் 145-க்கும் மேற்பட்ட நிறுவனங்களில் வேலை வாய்ப்பு பெற்ற 1,735 மாணவ,மாணவிகளுக்கு பணி நியமன உறுதி ஆணைகளை வழங்கினார். இதில், கவுரிகா, மோஹினீஷ், ராகுல் ஆகியோர் ஆண்டுக்கு ரூ.31 லட்சம் மற்றும் ரூ.21 லட்சம் ஊதியத்தில் வேலை வாய்ப்பு பெற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

நந்தா தொழில்நுட்பக் கல்லூரி முதல்வர் ச.நந்தகோபால் நன்றி கூறினார். விழாவுக்கான ஏற்பாடுகளை வேலை வாய்ப்புத் துறை ஒருங்கிணைப்பாளர்களும், விரிவுரையாளர்களுமான பிரபு, சிவராமகிருஷ்ணன், திருவேங்கடசாமி, நவீன் ஆகியோர் செய்திருந்தனர்.

9,288 மாணவர்கள் எழுதவுள்ளனர்

'நீட்' தேர்வு முன்னேற்பாடு குறித்து சேலம் ஆட்சியர் ஆலோசனை

சேலம்

'நீட்' தேர்வு வரும் 3-ம் தேதி நடைபெறவுள்ளதையொட்டி சேலம் மாவட்டத்தில் மேற்கொள் ளப்பட்டுள்ள தேர்வுக்கான முன்னேற்பாடு பணிகள் குறித்த ஆலோசனைக் கூட்டம், ஆட்சியர் அருண் தம்புராஜ் தலைமையில் சேலத்தில் நடைபெற்றது.

கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் ரவிக்குமார், ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) ஷாலினி, சேலம் அரசு கலைக்கல்லூரி முதல்வர் பிரேமலதா, வணிகவியல் துறை பேராசிரியர் ஜெயலட்சுமி, வருவாய்த் துறை காவல் துறை, தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறை, அரசு போக்குவரத்து கழகம், மின்வாரியம் உள்ளிட்ட தொடர்புடைய துறை கலந்து கொண்டனர்.

கூட்டம் குறித்து ஆட்சியர் தெரிவித்ததாவது:

மாவட்டத்தில் 'நீட்' தேர்வை 9,288 பேர் எழுத உள்ளனர். இத்தேர்வுக்காக 21 தேர்வு மையங்கள் அமைக்கப்பட்டு, 21 தேர்வு மைய மேற்பார்வையாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். மாணவ, மாணவிகள் நுழைவுச் சீட்டில் குறிப்பிட்டுள்ள நேரத்துக்கு முன்னதாக தேர்வு மையத்துக்கு வர வேண்டும். தேர்வுக் கூடங்களைக் கண்காணிக்கவும், தேர்வுக்கான அனைத்து ஏற்பாடுகளை மேற்கொள்ளும் பொருட்டும் மாவட்ட அளவிலான பொறுப்பு அலுவலர்கள் நியமனம் செய்யப்பட்டு, தேர்வுக்கான முன்னேற்பாடு பணிகள் அனைத்தும் மேற்கொள்ளப்பட்டுள்ளதை உறுதி செய்ய கூட்டத்தில் அறிவுறுத்தப்பட்டது.

தேர்வு மையங்கள் அமைந்துள்ள பகுதிகளில் தேர்வு நாளன்று காலை முதல் மாலை வரை தேவைக்கேற்ப சிறப்புப் பேருந்துகள் இயக்குவதற்கு அரசு போக்குவரத்துக் கழகத்துக்கும், தொடர்ச்சியான மற்றும் தடையில்லா மின்சாரம் வழங்குவதை உறுதி செய்ய மின்வாரியத்துக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

தேர்வு மையங்களில் அடிப்படை வசதிகளான குடிநீர், மின்சாரம், மாற்றுத் திறனாளிகளுக்கான சக்கர நாற்காலிகள் மற்றும் சாய்தளம் ஆகியவற்றை உறுதி செய்ய பொறுப்பு அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது, என்றார்.

ஆன்லைன் வர்த்தகத்தில் ரூ.35 லட்சம் இழந்ததால் விரக்தி

மேட்டூர் அருகே இளைஞர் தற்கொலை

மேட்டூர்

மேட்டூர் அருகே கொளத்தூரில், ஆன்லைன் வர்த்தகத்தில் ரூ.35 லட்சத்தை இழந்ததால் இளைஞர் தற்கொலை செய்து கொண்டார்.

தருமபுரி மாவட்டம் பென்னாகரத்தைச் சேர்ந்தவர் நாராயணன் (40). இவர் சிம்கார்டு விற்பனை மற்றும் ரீசார்ஜ் கடை நடத்தி வந்தார். இவருக்கு மனைவி, 13 வயதில் மகள், 6 வயதில் மகன் உள்ளனர்.

இந்நிலையில் நாராயணன் நேற்று முன்தினம் கடைக்கு செல்வதாக கூறிவிட்டு வீட்டிலிருந்து இரு சக்கர வாகனத்தில் மேட்டூருக்கு வந்துள்ளார். பின்னர், மாலை அவரது மனைவி தொடர்பு கொண்ட போது அழைப்பை ஏற்கவில்லை.

இதையடுத்து, அவரது மனைவி கொளத்தூரில் உள்ள அவரது நண்பர் மூலம் தேடிப் பார்த்தபோது மாங்காடு வாட்டர் டேங்க் அருகில் உள்ள விவசாய நிலத்தில் நாராயணன் விஷம் அருந்தி உயிரிழந்து கிடந்துள்ளார்.

தகவலறிந்து வந்த கொளத்தூர் போலீஸார் நாராயணன் உடலைக் கைப்பற்றி மேட்டூர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

இதுகுறித்து போலீஸார் கூறுகையில், 'நாராயணன் கடந்த 2 ஆண்டுகளாக ஆன்லைன் வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ளார். இதன் மூலம் ரூ.35 லட்சத்தை இழந்ததால் மன உளைச்சலில் இருந்த அவர் இந்த முடிவை எடுத்துள்ளார்' என்றனர்.

தற்கொலை எண்ணத்துக்கு தீர்வு தேட

தற்கொலை என்பது எந்தவொரு பிரச்சினைக்கும் தீர்வு இல்லை. தற்கொலை எண்ணத்துக்கு தீர்வு தேட சினேகா தற்கொலை தடுப்பு உதவி எண்: 044 -2464000 (24 hours), மாநில தற்கொலை தடுப்பு உதவி எண்: 104 (24 hours), ஐகால் (iCall Pychosocial) உதவி எண்e - 022-25521111 (Mon - Sat, 8am - 10pm) எண்களுக்குத் தொடர்பு கொள்ளவும்.

சேலம் ராஜகணபதி கோயிலில் கும்பாபிஷேக திருப்பணிகள் தொடங்க உள்ளதையொட்டி நேற்று பாலாலயம் நடந்தது. தொடர்ந்து, சுவாமிக்கு சிறப்பு ஆராதனை நடைபெற்றது

அரசியல், சமூக அமைப்புகள் தங்களது செய்திகளை எங்களது நாளிதழுக்கு மின்னஞ்சல் வழியாக அனுப்பலாம்.

மின்னஞ்சல் முகவரி: repsalem@hindutamil.co.in

வாக்கு எண்ணும் மையத்தில் பாதுகாப்பு நடைமுறைகளை பின்பற்ற வேண்டும்

நாமக்கல் மாவட்ட தேர்தல் அலுவலர் துர்காமூர்த்தி அறிவுறுத்தல்

நாமக்கல்

வாக்கு எண்ணும் மையத்தில் பாதுகாப்பு நடைமுறைகளை பின்பற்ற வேண்டும் என நாமக்கல் மாவட்ட தேர்தல் அலுவலர் அறிவுறுத்தியுள்ளார்.

நாமக்கல் ஆட்சியர் அலுவலகத்தில் வாக்கு எண்ணிக்கை பணி தொடர்பாக அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிப் பிரதிநிதிகள் கலந்து கொண்ட ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு மாவட்ட தேர்தல் அலுவலர் துர்காமூர்த்தி தலைமை வகித்து பேசியதாவது:

வாக்கு எண்ணும் மையத்தில் வேட்பாளர்கள் சார்பாக முகவர்களை நியமனம் செய்ய விண்ணப்ப படிவம் 18-ஐ உரிய முறையில் பூர்த்தி செய்து தேர்தல் நடத்தும் அலுவலரிடம் வழங்க வேண்டும். வாக்கு எண்ணும் மையத்தில் நியமிக்கப்படும் முகவர்களின் வயது 18 ஆண்டுகள் நிறைவடைந்திருக்க வேண்டும். வாக்கு எண்ணும் இடத்திற்குள் செல்போன், மடிக்கணினி உள்ளிட்ட மின்னணு கருவிகளையும் கொண்டு வர அனுமதி இல்லை. வாக்கு எண்ணும் மையத்தில் ஒழுங்கை பேணுதல் மற்றும் பாதுகாப்பு நடவடிக் கைகளைக் கடைப்பிடிக்க வேண்டும். முதலில் காலை 8 மணிக்குள் தபால் வாக்குகள் எண்ணும் பணி தொடங்கும். தொடர்ந்து 30 நிமிடங்களுக்கு பின்னர் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களில் பதிவான வாக்குகள் எண்ணும் பணி தொடங்கும்.

மின்னணு வாக்குப் பதிவு இயந்திரங்களில் பதிவான வாக்குகள் சுற்று முறையில் எண்ணப்படும். சுற்று வாரியாக வாக்குகள் தொகுக்கப்பட்டு, எண்ணிக்கை முடிவுகள் அறிவிக்கப்படும். ஒவ்வொரு வாக்கு எண்ணும் மேசையின் அருகில் கம்பி வலைக்கு வெளியே நியமிக்கப்பட்ட முகவர்கள் மட்டுமே அமர அனுமதிக்கப்படுவர். தபால் வாக்கு எண்ணும் பணி உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்கள் மூலம் முழுமையான கண்காணிப்பு மேற்கொள் ளப்படும்.

தபால் வாக்குகள் தனியாக எண்ணப்படும். வாக்கு எண்ணும் மையத்தில் குடிநீர், சிற்றுண்டி உள்ளிட்ட அடிப்படை வசதிகள் செய்யப்பட்டுள்ளன. எனவே அனைத்து அரசியல் கட்சியினர் மற்றும் தொடர்புடையவர்கள் வழிமுறை களைக் கடைப்பிடித்து வாக்கு எண்ணும் பணி சீராக நடைபெற ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

இவ்வாறு அவர் பேசினார்.

மாவட்ட காவல் கண்காணிப்பாளர் விமலா, மாவட்ட வருவாய் அலுவலர் மா.க.சரவணன், துணை மாவட்ட தேர்தல் அலுவலர் ம.கண்ணன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (தேர்தல்) ஆர்.சுஜாதா உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இந்து தமிழ் திசை

பொறுப்பல்ல: இந்தச் செய்தித்தாளில் பிரசுரம் ஆகியுள்ள விளம்பரங்களின் அடிப்படையில் செயல்படுமுன், அவற்றில் உள்ள தகவல்கள் சரியானவைதானா என்பதை போதுமான அளவு விசாரித்து சரிபார்த்துக்கொள்ளுமாறு வாசகர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். விளம்பரங்கள்/ விளம்பரதாரர் / அவர்களின் தயாரிப்புகள் / சேவைகள் போன்றவற்றின் நம்பகத்தன்மைக்கு இந்தச் செய்தித்தாளின் உரிமையாளரும் பதிப்பாளருமான கஸ்தூரி & சன்ஸ் லிமிடெட் / கே.எஸ்.எல். மீடியா லிமிடெட் உத்தரவாதம் அளிக்கவில்லை. இந்தச் செய்தித்தாளில் வெளியாகும் விளம்பரங்களால் ஏதேனும் சேதம் அல்லது இழப்பு ஏற்படும் பட்சத்தில், இந்தச் செய்தித் தாளின்/ மேற்சொன்ன நிறுவனங்களின் உரிமையாளர், பதிப்பாளர், அச்சிடுவோர், ஆசிரியர், இயக்குநர்கள், ஊழியர் கள் ஆகியோர் எந்தச் சூழலிலும் எந்த வகையிலும் அதற்குப் பொறுப்பாகமாட்டார்கள்.

படைப்புகளை அனுப்புவோர் பிரதி எடுத்துவைத்துக்கொண்டு அனுப்பவும். பிரசுரமாகாதவற்றைத் திரும்ப அனுப்ப இயலாது.

டாடா கேபிட்டல் லிமிடெட்

TATA

பதிவு அலுவலகம் முகவரி : 11வது தளம், பெனிசூலா பிசினஸ் பார்க், லோவர் பெரல், மும்பை-400013.

சுவாதீன அறிவிப்பு

(இணைப்பு IV-ன்படி பாதுகாப்பு வட்டி அமலாக்கம் விதிகள், 2002-ன் விதி 8(1)-ன்கீழ்)

நாங்கள், **டாடா கேபிட்டல் லிமிடெட்** (இனிமேல் "TCL" என குறிப்பிடப்படுகிறது - மாற்றப்பட்டது) மூலம் **டாடா கேபிட்டல் பைனான்ஸ் சர்வீஸ் லிமிடெட்** (இனிமேல் "TCFSL" என அழைக்கப்படும் - மாற்றம் செய்பவர்) தேசிய நிறுவன சட்ட தீர்ப்பாயம், மும்பையால் **24 நவம்பர் 2023** தேதியிட்ட உத்தரவுபடி 2013 நிறுவனங்கள் சட்டம், பிரிவு 230 முதல் 232 r/w பிரிவு 66 மற்றும் மற்ற பொருந்தக்கூடிய விதிகளின்கீழ், டாடா கேபிட்டல் பைனான்சியல் சர்வீஸ் லிமிடெட் (TCFSL) - மாற்றம் செய்பவர் மற்றும் **டாடா கேபிட்டல் லிமிடெட் ("TCL")** என மாற்றப்பட்டது இடையே ஒப்புக் கொள்ளப்பட்ட ஏற்பாட்டின் திட்டத்தின்படி ("கூறிய திட்டம்") எங்கள் பதிவு அலுவலகம் 11வது தளம், டவர் ஏ, பெனிசூலா பிசினஸ் பார்க், கணபத்ராவ் கடம் மார்க், லோவர் பெரல், மும்பை-400013 மூலம் 2002 மறுகட்டமைப்பு மற்றும் பாதுகாப்பு வட்டிச் சட்டத்தின் அமலாக்கம் மற்றும் நிதிச் சொத்துகளின் பத்திரமாக்கல் விதி 13(2)-ன்கீழ் (இனி "சட்டம்" என குறிப்பிடப்படுகிறது) பின்வரும் அறிவிப்பை உங்களுக்கு வழங்குகிறோம்.

கீழே கையொப்பமிட்டுள்ள **டாடா கேபிட்டல் லிமிடெட்**-ன் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி நிதிச்சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டு சொத்து மீதான உரிமை அமலாக்கம் பாதுகாப்பு வட்டி சட்டம், 2002 (54/2002) மற்றும் பாதுகாப்பு வட்டி (அமலாக்க) விதிகள், 2002-ன் விதி 3-ன்படி பிரிவு 13(2)-ன்கீழ் வழங்கப்பட்ட அதிகாரத்தை பயன்படுத்தி, **06.01.2026** அன்று **கோரிக்கை அறிவிப்பு** வழங்கப்பட்டது மற்றும் கடன்தாரர் மற்றும் இணை-கடன்தாரர்/ ஜாமீன்தாரர்கள் கடைசியாக அறியப்பட்ட முகவரியில் ஒட்டப்பட்டது மற்றும் மேலும் **31.01.2026** அன்று இந்து தமிழ் மற்றும் பிசினஸ் ஸ்டாண்டர்ட் செய்தித்தாள்களில் வெளியிடப்பட்டது, கடன்தாரர் மற்றும் இணை-கடன்தாரர்/ஜாமீன்தாரர்கள் **1) திரு. கௌதம் ராஜ் சங்கர்,** த/பெ. சங்கர், வீட்டு எண். 5/5/2, சௌடேஸ்வரி நகர், இளம்பிள்ளை, சேலம், தமிழ்நாடு, பின்-637502, மேலும் முகவரி திரு. கௌதம் ராஜ் சங்கர், த/பெ. சங்கர், M/S Sri Gowtham Raj Textiles,, 5-4/44, சௌடேஸ்வரி நகர், இளம்பிள்ளை, சேலம், தமிழ்நாடு - 637502, **2) திரு. V சங்கர், த/பெ. விஸ்வநாதன்,** வீட்டு எண். 3/5/2, சௌடேஸ்வரி நகர், இளம்பிள்ளை, சேலம், தமிழ்நாடு, பின் - 637502, மேலும் முகவரி திரு. V. சங்கர், த/பெ. விஸ்வநாதன், M/S. Sri Lakshmi Balaji Silks, 29/1வது எண்.2, சுப்பிரமணி கோவில் தெரு, சேலம், தமிழ்நாடு, பின் - 637502, **3) M/s. Sri Gowtham Raj Textiles,** அதன் பிரதிநிதி உரிமையாளர் திரு. கௌதம் ராஜ் சங்கர், 5-4/44, சௌடேஸ்வரி நகர், இளம்பிள்ளை, சேலம், தமிழ்நாடு, பின் - 637502 மற்றும் **4) M/s. Sri Lakshmi Balaji Silks,** அதன் பிரதிநிதி உரிமையாளர் திரு. V. சங்கர், 29/1வது, எண்.2, சுப்பிரமணி கோவில் தெரு, சேலம், தமிழ்நாடு, பின்-637502, ஆகியோருக்கு வழங்கப்பட்ட கோரிக்கை அறிவிப்பில் உள்ள செலுத்தப்பட வேண்டிய தொகை **05.01.2026** அன்றைய நிலுவை தொகை **ரூ.85,38,060/- (ரூபாய் எண்பத்தி ஐந்து இலட்சத்து முப்பத்தி எட்டாயிரத்து அறுபது மட்டும்) கடன் எண். TCFLA0482000012312916,** அத்துடன் வட்டி, மேலும் வட்டி, கட்டணங்கள், செலவுகள், இதர ஆகியவற்றை அறிவிப்பு பெற்ற நாளிலிருந்து **60 நாட்களுக்குள்** செலுத்த வேண்டும் என அறிவிப்பு வழங்கப்பட்டது.

கடன்தாரர் தொகை செலுத்த தவறிவிட்டபடியால் பொதுமக்களுக்கு பொதுவாகவும், கடன்தாரர் குறிப்பாகவும் இதன் மூலம் அறிவிப்பதாவது மேற்படி சட்டம் பிரிவு 13 அதன் பிரிவு (4)-ன்கீழ் மற்றும் அதற்குத் தொடர்புடைய 2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்து மீதான உரிமை விதி 8-ல் தமக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி மேலே விவரிக்கப்பட்டுள்ள சொத்தினை **24.04.2026** தேதியன்று சுவாதீனம் செய்துள்ளார்.

மேற்குறிப்பிட்ட கடன்தார்களுக்கு குறிப்பாகவும், பொதுமக்களுக்கு பொதுவாகவும் இதன் மூலம் எச்சரிக்கப்படுவது யாதெனில் சுவாதீனமான அடமான சொத்துக்கள் விஷயத்தில் எவரும் எவ்வித பேரமும் வைத்துக் கொள்ளக்கூடாது. மீறி வைத்துக்கொண்டால் அது **டாடா** கேபிட்டல் லிமிடெட்-க்கு செலுத்தப்பட வேண்டிய **ரூ.88,56,866/- (ரூபாய் எண்பத்தி எட்டு இலட்சத்து ஐம்பத்தி ஆறாயிரத்து எண்ணூற்றி அறுபத்தி ஆறு மட்டும்) கடன் கணக்கு எண். TCFLA0482000012312916, 17-04-2026 அன்றுள்ளபடி,** அத்துடன் வட்டி, கட்டணங்கள், செலவுகள், இதர உட்பட செலுத்துவதற்கு கட்டுப்பட்டதாகும்.

(கடனுக்கு ஈடாக அடமானம் வைக்கப்பட்டுள்ள சொத்தினை மீட்பதற்குரிய கால வரம்பு குறித்து சட்டம் 13-ன் பிரிவு (8) ஷரத்துக்களின்படி கடன்தாரர்களின் கவனம் ஈர்க்கப்படுகிறது)

அட்டவணை சொத்து அடமானம் : சேலம் மாவட்டம், சேலம் மேற்கு RD, மகுடன்சாவடி SRO, சங்கரி தாலுகா, எடங்கனசாலை பிட் 2 கிராமம், ச.எண். 136/7 புஞ்சை ஹெக்டேர் 0.35.5 புஞ்சை ஏக்கர் 0.88 Kist 1.37 துணை பிரிவின்படி 136/7B புஞ்சை ஹெக்டேர் 0.17.5 Kist 0.70 துணை பிரிவின்படி பட்டா எண். 1947 ச.எண்.136/7B1, மற்றும் ச.எண். 136/8A புஞ்சை ஹெக்டேர் 0.44.0 புஞ்சை ஏக்கர் 1.08 Kist 1.69 மற்றும் ச.எண். 136/9 புஞ்சை ஹெக்டேர் 0.31.0 புஞ்சை ஏக்கர் 0.76½ Kist 1.19 இதில் மொத்தம் புஞ்சை ஏக்கர் 2.29¼ இதில் மனைகள் "J J நகர்" பெயரில் அமைந்துள்ளது, இதில் மனை எண். 37 பகுதி, பரப்பு 2700 சதுர அடி நிலம் மற்றும் அனைத்து மற்ற அடிப்படை உரிமைகள் மற்றும் பின்வரும் எல்லைகள் **கிழக்கு :** ச.எண். 136/7 வைதி சொத்து, **மேற்கு :** 23 அடி வடக்கு தெற்கு சாலை, **வடக்கு :** மனை எண்.16, 17, 18 சொத்து, **தெற்கு :** மனை எண்.37, வடக்கு பக்கம் சங்கர் சொத்து. கிழக்கு மேற்கு வடக்கு பக்கம் 90 அடி, கிழக்கு மேற்கு தெற்கு பக்கம் 90 அடி, வடக்கு தெற்கு கிழக்கு பக்கம் 30 அடி, வடக்கு தெற்கு மேற்கு பக்கம் 30 அடி, மொத்தம் பரப்பளவு 2700 சதுர அடி. பட்டாவின்படி, தற்போது சொத்து பட்டா எண். 3078, சர்வே எண். 136/7பி 1சி, எடங்கனசாலை பிட்-2 கிராமம். **சொத்து-2 (விற்பனை பத்திரம் எண். 9901/2022) :** சேலம் மாவட்டம், சேலம் மேற்கு RD, மகுடன்சாவடி SRO> சங்கரி தாலுகா, எடங்கனசாலை பிட் 2 கிராமம், ச.எண். 136/7 புஞ்சை ஹெக்டேர் 0.35.5 புஞ்சை ஏக்கர் 0.88 Kist 1.37 துணை பிரிவின்படி 136/7B புஞ்சை ஹெக்டேர் 0.17.5 Kist 0.70 துணை பிரிவின்படி பட்டா எண். 1947 ச.எண்.136/7B1, மற்றும் ச.எண். 136/8A புஞ்சை ஹெக்டேர் 0.44.0 புஞ்சை ஏக்கர் 1.08 Kist 1.69 மற்றும் ச.எண். 136/9 புஞ்சை ஹெக்டேர் 0.31.0 புஞ்சை ஏக்கர் 0.76½ Kist 1.19 இதில் மொத்தம் புஞ்சை ஏக்கர் 2.29¼ இதில் மனைகள் "J J நகா;" பெயரில் அமைந்துள்ளது, இதில் மனை எண். 37 பகுதி, பரப்பு 2565 சதுர அடி நிலம் மற்றும் அனைத்து மற்ற அடிப்படை உரிமைகள் மற்றும் பின்வரும் எல்லைகள் **கிழக்கு :** ச.எண். 136/7 வைதி சொத்து, **மேற்கு :** 23 அடி வடக்கு தெற்கு சாலை, **வடக்கு :** மனை எண். 37 தெற்கு பக்கம் கௌதம் ராஜ் சொத்து, **தெற்கு :** ச.எண். 136/8ஏ 2அடி கிழக்கு மேற்கு சாலை மற்றும் ச.எண். 136/பள்ளி சொத்து. 1வது தாக்கு : கிழக்கு மேற்கு வடக்கு பக்கம் 90 அடி, கிழக்கு மேற்கு தெற்கு பக்கம் 90 அடி, வடக்கு தெற்கு கிழக்கு பக்கம் 7 அடி, வடக்கு தெற்கு மேற்கு பக்கம் 7 அடி. அளவுகள் 630 சதுர அடி 2வது தாக்கு கிழக்கு மேற்கு வடக்கு பக்கம் குறுக்கு 100 3/4 அடி, கிழக்கு மேற்கு தெற்கு பக்கம் 90 அடி, வடக்கு தெற்கு கிழக்கு பக்கம் 43 அடி, வடக்கு தெற்கு மேற்கு பக்கம் 0 அடி. அளவுகள் 1935 சதுர அடி மொத்த அளவுகள் 2565 சதுர அடி. பட்டாவின்படி, தற்போது சொத்து பட்டா எண். 3077, சர்வே எண். 136/7B1B, எடங்கனசாலை பிட்-2 கிராமத்தில் அமைந்துள்ளது.

இடம் : சேலம்
நாள் : 01.05.2026

Sd/- திரு. ராகேஷ் டேனி கோக்கட்டு (அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி)
டாடா கேபிட்டல் லிமிடெட்

SBFC பைனான்ஸ் லிமிடெட்
(முன்னதாக SBFC பைனான்ஸ் பிரைவேட் லிமிடெட்)

பதிவு அலுவலகம் : யூனிட் எண்.103, முதல் தளம், C&B ஸ்கூயர், சங்கம் காம்ப்ளக்ஸ், சாகலா கிராமம், அந்தேரி-குர்லா சாலை, அந்தேரி (கிழக்கு), மும்பை-400059

கோரிக்கை அறிவிப்பு

இங்கே குறிப்பிடப்பட்டுள்ள கடன்தாரர்கள்/இணை-கடன்தாரர்கள் **SBFC பைனான்ஸ் லிமிடெட்** அவர்களிடமிருந்து நிதி உதவியைப் பெற்றுள்ளனர். நிதி உதவியைப் பெற்றிருந்தாலும், கடன்தாரர்கள்/அடமானதாரர்கள் நிலுவைத் தேதிகளின்படி வட்டி மற்றும் அசல் தொகையைத் திருப்பிச் செலுத்துவதில் பல்வேறு தவறுகளைச் செய்துள்ளனர். இங்கே குறிப்பிடப்பட்டுள்ள கணக்குகள் அந்தந்த தேதிகளில் செயல்படாத சொத்தாக வகைப்படுத்தப்பட்டுள்ளது, **SBFC பைனான்ஸ் லிமிடெட்டி**ன் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியானவர் இந்திய ரிசர்வ் வங்கியின் வழிகாட்டுதல்களின்படி **SBFC** புத்தகங்களில் உள்ளபடி நிதிச் சொத்துக்களை பத்திரப்படுத்துதல் மற்றும் புனரமைத்தல் மற்றும் அடமான வட்டிச் சட்டம், 2002 ("SARFAESI சட்டம்") அமலாக்கம் மற்றும் பாதுகாப்பு நலன் (அமலாக்க விதிகள், 2002-ன் விதி 3 உடன் படிக்கப்பட்ட பிரிவு 13(12)-ன்கீழ் வழங்கப்பட்ட அதிகாரங்களைப் பயன்படுத்தி கீழே குறிப்பிடப்பட்டுள்ள அந்தந்த தேதிகளின் கோரிக்கை அறிவிப்பு வழங்கப்பட்டன, கடன்தாரர்கள்/ அடமானதாரர்கள் அறிவிப்புகளில் குறிப்பிடப்பட்டுள்ள தொகையை ஒப்பந்த விகிதத்தில் மேலும் வட்டி, தற்செயலான செலவுகள், கட்டணங்கள் போன்றவற்றை அறிவிப்புகள் பெறப்பட்ட நாளிலிருந்து **60 நாட்களுக்குள்** பணம் செலுத்தும் தேதி வரை திருப்பிச் செலுத்த வேண்டும். அவர்களின் கடைசியாக அறியப்பட்ட முகவரிகளில் அவர்களுக்கு வழங்கப்பட்ட அறிப்புகள் வழங்கப்படாமல் திரும்பிவிட்டதால், அதைப்பற்றி பொது அறிவிப்பு மூலம் தெரியப்படுத்த பொது அறிவிப்பு அறிவிக்கப்படுகிறது.

வ. எ ண்.	கடன்தாரர் பெயர்/ முகவரி	அறிவிப்பு நாள் மற்றும் NPA	கடன் மற்றும் நிலுவைத் தொகை	பாதுகாப்பு சொத்துக்கள் முகவரி
1	**1. பாலு தினேஷ்குமார் (மனுதாரர்), 2. தினேஷ்குமார் பிரியதர்ஷினி (இணை-மனுதாரர் 1) 3. ராணி அர்ஜுனன் (இணை-மனுதாரர் 2), 4. அர்ஜுனன் ஆறுமுகம் (இணை-மனுதாரர் 3), 5. கோகுலகண்ணன் அர்ஜுனன் (இணை-மனுதாரர் 3),** முகவரி 51/2, லட்சுமி கார்டன், 2வது தெரு, 46 புதூர் ஈரோடு, தண்ணீர் தொட்டி அருகில், ஈரோடு ரயில்வே காலனி, தமிழ்நாடு - 638002, மற்றும் மேலும்: 1.A பாலு தினேஷ்குமார் (மனுதாரர்) க. எண்.41,ST-3, வார்டு-6, மனை எண்.48, நத்தம் SF எண். 752/1C & 752/2A, பாலமேட்டுபுதூர் நெசவாளர் காலனி, சிவகிரி கிராமம் & டவுன் பஞ்சாயத்து & TK, ஈரோடு மாவட்டம்- 638109.	அறிவிப்பு நாள் : 20.03.2026 NPA நாள் : 06.05.2026	கடன் கணக்கு எண். SBF-CLAP0000119272 (PR01634368). கடன் தொகை ரூ.16,00,000/- (ரூபாய் பதினாறு இலட்சம் மட்டும்) வசதி ஒப்பந்தம் எண். SBF-CLAP0000119272 (PR01634368). மொத்த நிலுவை தொகை: ரூ.21,12,389/- (ரூபாய் இருபத்தி ஒரு இலட்சத்து பன்னிரெண்டாயிரத்து முன்னூற்றி எண்பத்தி ஒன்பது மட்டும்) **13.03.2026** அன்று, மற்றும் 14.03.2026 முதல் விதிக்கப்படாத வட்டி உட்பட	சொத்து மற்றும் அதனை சார்ந்த அனைத்து பகுதிகளும், க.எண். 41, எஸ்டி-3, வார்டு-6, மனை எண். 48, நத்தம் எஸ்.எப். எண். 752/1சி மற்றும் 752/2ஏ, பாலமேட்டுபுதூர் நெசவாளர் காலனி, சிவகிரி கிராமம் மற்றும் டவுன் பஞ்சாயத்து மற்றும் தாலுகா, ஈரோடு மாவட்டம்-638109 மற்றும் எல்லைகள்: **கிழக்கு:** சைட் எண்.47, **மேற்கு:** வடக்கு-தெற்கு நீள பொது பாதை, **வடக்கு:** சைட் எண்.49, **தெற்கு:** ஆர்.எஸ். எண்.752.

மேற்கூறிய சூழ்நிலையில், இந்த அறிவிப்பு வெளியிடப்பட்ட நாளிலிருந்து 60 நாட்களுக்குள் மேலே குறிப்பிட்டுள்ள நிலுவைத் தொகைகளை எதிர்கால வட்டி மற்றும் பொருந்தக்கூடிய கட்டணங்களுடன் செலுத்துமாறு மேற்கண்ட கடன்தாரர்கள், இணை-கடன்தாரர்களுக்கு இதன் மூலம் அறிவிப்பு வழங்கப்படுகிறது, தவறினால், இந்த அறிவிப்பின் தேதியின் **60 நாட்கள்** காலாவதியான பிறகு SARFAESI சட்டத்தின் பிரிவு 13(4) மற்றும் அதன்கீழ் பொருந்தக்கூடிய விதிகளின்கீழ் கடன்தாரர்கள் மற்றும் அடமானதாரர்களின் அடமான சொத்துக்களை கையகப்படுத்துவது உட்பட, அடமானம் வைக்கப்பட்ட சொத்துகளுக்கு எதிராக மேலும் நடவடிக்கைகள் எடுக்கப்படும். SARFAESI சட்டத்தின் பிரிவு 13(13)-ன்கீழ், கடன்தாரர் கடன் அளித்தவரின் முன் எழுத்துப்பூர்வ அனுமதியின்றி, அறிவிப்பில் குறிப்பிட்டுள்ள அடமான சொத்துக்களை விற்பனை, குத்தகை அல்லது வேறுவிதமாக மாற்றக்கூடாது என்பதை நினைவில் கொள்ளவும்.

நாள் : 01.05.2026, இடம் : ஈரோடு/தமிழ்நாடு — Sd/- அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, SBFC பைனான்ஸ் லிமிடெட்

UJJIVAN SMALL FINANCE BANK

பதிவு அலுவலகம்: கிரேப் கார்டன், எண்.27, 3வது A குறுக்கு, 18வது மெயின், கோரமங்கலா 6வது பிளாக், கோரமங்கலா, பெங்களூர்-560095.
கிளை அலுவலகம்: எண்.369/3, ரத்னா ஆர்கேட், ஐந்து சாலைகள், மெய்யனூர், சேலம், தமிழ்நாடு-636004

இ-ஏல விற்பனை அறிவிப்பு

கடனீட்டு சொத்துக்களை ரொக்கமாக்குதல் நிதிச்சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டு சொத்துக்கள் அமலாக்கச் சட்டம் 2002 பாதுகாப்புநடைமுறை விதிகள்2002 விதி எண்.8(6) & 9(1)-ன் கீழ் அசையா சொத்தின் இ-ஏல விற்பனை அறிவிப்பு.

SARFAESI சட்டம் 2002 பிரிவு 13(4) ன்கீழ் உஜ்ஜிவன் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட்-ன் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி ஆனவர் தமக்குள்ள அதிகாரத்தை பயன்படுத்தி பின்வரும் சொத்துக்களை சுவாதீனம் செய்துள்ளார். கடன் நிலுவைத் தொகையை வசூலிக்கும் பொருட்டு, கீழ்கண்ட கடன் கணக்குகளின் அடமான சொத்துக்களை, "உள்ளது உள்ளவாறு" மற்றும் "உள்ள இடத்தில் உள்ளவாறு" எனும் அடிப்படையில் கீழ்க்கண்ட தேதியில் விற்பனை செய்யப்படும் என இதன் மூலம் கடன்தாரருக்கும் மற்றும் பொது மக்களுக்கும் அறிவிக்கப்படுகிறது.

கடன் கணக்கு எண் / கடன்தாரர்கள் பெயர்	(i) 13-2 அறிவிப்பு தேதி & நாளது தேதிப்படி கோரிக்கையில் கோரப்பட்ட கடன்தொகை (ii) சுவாதீனம் எடுத்த தேதி	கடன் நிலுவைத் தொகை	குறைந்தபட்ச கேட்பு விலை	டேவணித் தொகை (EMD)
1172210180000007 / 1.Mr.தாமோதரன்.R 2.Mrs.கோகிலா.D	(I) 24.09.2019 & 24.09.2019 அன்றுள்ளபடி ₹ 16,20,138/- (ரூபாய் பதினாறு லட்சத்து இருபதாயிரத்து நூற்று முப்பத்தெட்டு மட்டும்) (ii) அடையாளபூர்வ சுவாதீனம் - 15.03.2025 & நேரடி சுவாதீனம் - 21.01.2026	10.04.2026 அன்றுள்ளபடி ₹ 31,42,123/- (ரூபாய் முப்பத்தொரு லட்சத்து நாற்பத்திரண்டாயிரத்து நூற்று இருபத்து மூன்று மட்டும்)	₹ 18,05,000/- (ரூபாய் பதினெட்டு லட்சத்து ஐந்தாயிரம் மட்டும்)	₹ 1,80,500/- (ரூபாய் ஒரு லட்சத்து எண்பதாயிரத்து ஐநூறு மட்டும்)

சொத்து விவரம்: சேலம் மேற்கு பதிவு மாவட்டம், சூரமங்கலம் சார் பதிவு மாவட்டம் எல்லைக்குட்பட்ட புஞ்சை ஏக்கர் 3.86 தீர்வை Rs.8.2.0, மொத்தமுள்ள புஞ்சை ஏக்கர் 1.28-ல் 1/3 பங்கு பரப்பு புஞ்சை ஏக்கர் 0.48, பாகம் பிரிக்கப்பட்ட படி சர்வே எண்.251/40, **கோட்டை கல்லாங்குத்து ஜாகீர் அம்மாபாளையம், சேலம் தாலுகா, சேலம் மாவட்டம்** என்னும் முகவரியில் கிழக்கு மேற்காக வடக்கு பக்கம் 31 அடி, கிழக்கு மேற்காக தெற்கு பக்கம் 30½ அடி, வடக்கு தெற்காக கிழக்கு பக்கம் 13 அடி, மேற்கு பக்கம் 10½ அடி **ஆக மொத்த பரப்பு 361 சதுர அடி நிலம் மற்றும் தரைத்தளம் மற்றும் முதல் தளம் கொண்ட RCC தளம் போட்ட கட்டிடம்,** அதனுடன் மேற்கண்ட கட்டிடத்தின் அனைத்து பொருத்தப்பட்டுள்ளவைகள் மற்றும் அனைத்து அனுமந்தங்கள், அதனுடன் இணைந்த துண்டுகளும் பகுதிகளும். எல்லைகள்: கோகிலா மற்றும் ராதாகிருஷ்ணன்-க்கு சொந்தமான சொத்திற்கு கிழக்கு, வடக்கு தெற்கு ரோட்டிற்கு மேற்கு, கண்ணன்-க்கு சொந்தமான சொத்திற்கு வடக்கு, கல்யாணசுந்தரம்-க்கு சொந்தமான சொத்திற்கு தெற்கு.

இ-ஏல தேதி மற்றும் நேரம் : 10.06.2026 காலை 11.00 மணியிலிருந்து நண்பகல் 12.00 மணி வரை

விலைக்குறிப்பிடுகளை சமர்ப்பிக்க கடைசி தேதி: **09.06.2026** அன்றோ அதற்கு முன்னரோ காலை 10.00 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை

சொத்தினை பார்வையிடும் தேதி & நேரம் **08.06.2026** காலை 10.00 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை

மேலும் விவரங்களுக்கு, தொடர்பு கொள்ள வேண்டிய வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி :
Mr.சதீஷ் - 95666 66963 / Mr.டீஜோ சாஜன் – 78451 92961

இ-ஏலமானது "உள்ளது உள்ளவாறு" மற்றும் "உள்ள இடத்தில் உள்ளவாறு" எனும் அடிப்படையில் விற்பனை செய்யப்படும்.
இ-ஏலமானது உஜ்ஜிவன் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட்-ன் அங்கீகரிக்கப்பட்ட இ-ஏல சேவை வழங்குனரான **M/s.C1 India PVT LTD.** மூலம் நடைபெறவுள்ளது. (தொடர்புக்கு **Mr.பிரபாகரன் Mob.74182 81709**) உத்தேச விலைக்குறிப்பீட்டாளர்கள் இணையதளத்தில் உள்ள சொத்துக்களின் விவரங்களுக்கு **https://www.bankeauctions.com or https://www.ujjivansfb.in/e-auctions** பார்வையிடலாம் மற்றும் விலைக்குறிப்பீட்டில் பங்கேற்பதற்காக அவர்கள் தங்கள் பெயரை **https://www.bankeauctions.com**-ல் பதிவு செய்து பயனாளர் ID மற்றும் கடவுச்சொல்லினை இலவசமாக பெற்றுக்கொள்ளலாம். விருப்பமுள்ள விலைக்குறிப்பீட்டாளர்கள் இ-ஏலத்தின் ஆன்லைன் பயிற்சியை சேவை வழங்குனரிடருந்து பெற்றுக் கொள்ளலாம். **M/s. C1 India PVT LTD, Helpline Number's- 7291918824,25,26 support email id:- support@bankeauctions.com, Auction portal - https://www.bankeauctions.com.**
விற்பனை குறித்த விரிவான விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு, கடன் கொடுத்த வங்கியின் இணையதளத்தில் பார்க்கலாம்.
i.e., **https://www.ujjivansfb.in/e-auctions / https://www.bankeauctions.com**

ஒப்பம்/-
தேதி: 01.05.2026, இடம்: பெங்களூரு — அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, உஜ்ஜிவன் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட்

Published by Vijaya Arun on behalf of KSL MEDIA LIMITED and Printed by M Jegadesh Kumar at THG PUBLISHING PVT.LTD. 391/1 & 391/2 Kamaraj Road, Uppilipalayam, Coimbatore, Tamil Nadu 641015. Editor: V. Venkateswaran (Responsible for selection of news under the PRP Act).